பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
27 09 2025 12 40
சனிக்கிழமை நண்பகல்

ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு பொருளாதார வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக சி பா ஆதித்தனார் ஆற்றிய பங்கு போற்றுதலுக்குரியது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் புகழாரம் சூட்டியுள்ளார்.

3. தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் தொடர்ந்து ஆதரவளித்து வருவதாக இந்தியா மீண்டும் குற்றம் சாட்டியுள்ளது.

4. வங்கக் கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் ஒடிஷாவின் கோபால்பூர் அருகே இன்று அதிகாலை கரையை கடந்தது.

5. உலக பாரா வில்வித்தைப் போட்டியில் இந்தியாவின் Sheetal – Sarita இணை வெள்ளிப் பதக்கம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு பொருளாதார வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதுதொடர்பாக நிதியமைச்சகத்தின் அறிக்கையையும் பகிர்ந்துள்ளார்.

பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு இது உதவிடும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளதை பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வரி குறைப்பு காரணமாக இணைய விற்பனை 25 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

>><><><><><<

*நமது நாட்டின் கலாச்சாரம் பாரம்பரியம் மற்றும் புராதன சின்னங்களை பாதுகாக்கவும், அவற்றை தூய்மையாக பராமரிக்கவும், அனைவரும் உறுதியேற்போம் என்று மத்திய அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் கேட்டுக்கொண்டுள்ளார்.*

*உலக சுற்றுலா தினத்தையொட்டி சமூக வலைதளத்தில் விடுத்துள்ள செய்தியில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.*

*சுற்றுலா என்பது மகிழ்ச்சி மட்டுமின்றி அறிவு மற்றும் அனுபவத்தை வழங்குவதாகவும் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.*

*இதற்கிடையே, தமிழகத்தின் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல் சுற்றுலாவின் சொர்க்க பூமியாக திகழ்கிறது என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் – ராஜசேகர் - 50 செகண்ட்ஸ்)*

*>><><><><><<*

*தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக சி பா ஆதித்தனார் ஆற்றிய பங்கு போற்றுதலுக்குரியது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் புகழாரம் சூட்டியுள்ளார்.*

*சி பா ஆதித்தனாரின் பிறந்த தினத்தையொட்டி சமூக வலைதளத்தில் அவர் இக்கருத்தை பதிவுசெய்துள்ளார்.*

*தமிழக சட்டப்பேரவைத் தலைவராக, உறுப்பினராக மற்றும் அமைச்சராக மக்கள் பணியாற்றியவர் சி பா ஆதித்தனார் என்றும் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.*

*>><><><><><<*

*நாடுமுழுவதும் தூய்மையே சேவை இயக்கத்தின்கீழ், கலாச்சாரத் துறை சார்பில் தூய்மைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*ஆக்ராவில் இதுகுறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், ஓவியப் பயிலரங்கம் நடத்தப்பட்டது.*

*தமிழகத்தின் மதுரையிலும் ஓவியப்போட்டிகள் நடத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

ஏராளமான மாணவர்கள் இந்த பயிலரங்கில் பங்கேற்றனர்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் கலாச்சாரத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் தூய்மைப்பணிகளில் ஈடுபட்டனர்.

>><><><><><<

உத்தரபிரதேசத்தில் சட்டம் ஒழுங்கை சீர்குலைக்க முயற்சிப்போர் மீது தமது அரசு கடும் நடவடிக்கை எடுக்கும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.

மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு நிலைமை குறித்து, காவல்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டு அவர் பேசினார்.

*Barailly*-யில் நேற்று நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில் காவல்துறையினர் உட்பட பலர் காயமடைந்ததை அடுத்து அவர் இந்த ஆலோசனையை மேற்கொண்டார்.

மாநிலம் முழுவதும் காவல்துறையினர் கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் போராட்டத்தில் ஈடுபடுவோர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் திரு. யோகி ஆதித்யநாத் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

>><><><><><<

பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும் என்று அம்மாநில துணை முதலமைச்சர் திரு விஜய்குமார் சின்ஹா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மகளிர் மேம்பாட்டுக்காக தேசிய ஜனநாயக கூட்டணி கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக குறிப்பிட்டார்.

இதன காரணமாக ஏராளமான மகளிர் நலனுக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்பட்டு வருவதாகவும் திரு விஜய்குமார் சின்ஹா தெரிவித்தார்.

>><><><><<

தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் தொடர்ந்து ஆதரவளித்து வருவதாக இந்தியா மீண்டும் குற்றம் சாட்டியுள்ளது.

ஐ.நா பொதுச்சபை கூட்டத்தில் உரையாற்றிய இந்தியாவுக்கான நிரந்தர பிரதிநிதி திருமதி. Petal Gahlot, தீவிரவாதத்தை வெளியுறவு கொள்கையாகவே பாகிஸ்தான் கடைபிடித்து வருவதாக குற்றம் சாட்டினார்.

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது கொல்லப்பட்ட தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் ராணுவமும், மக்களும் மரியாதை செலுத்தியதை அவர் சுட்டிக்காட்டினார்.

ஆபரேஷன் சிந்தூரை நிறுத்திக்கொள்ளுமாறு பாகிஸ்தான் கெஞ்சியதாகவும் அவர் கூறினார்.

இதில் எந்தவொரு மூன்றாம் நாட்டிற்கும் பங்கு இல்லை என்றும் அவர் தெளிவுப்படுத்தினார்.

இந்தியாவுக்கு எதிராக தீவிரவாத செயல்களில் யார் ஈடுபட்டாலும், உரிய பதிலடி கொடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

பாகிஸ்தானில் செயல்படும் தீவிரவாத முகாம்களை அழிக்க அந்நாட்டு அரசு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அணுஆயுத அச்சுறுத்தல்களுக்கு இந்தியா அடிபணியாது என்றும் திருமதி. Petal Gahlot திட்டவட்டமாக தெரிவித்தார்.

>><><><><<

கேரளாவில் மாதிரி டிஜிட்டல் நீதிமன்றத்தை ஏற்படுத்துவதற்காக அம்மாநில அரசு 2 கோடியே 73 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

உயர்நீதிமன்றம் சமர்ப்பித்த பரிந்துரையின் அடிப்படையில் இந்தநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருப்பதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

இந்த மாதிரி நீதிமன்றத்தில் அதிநவீன தகவல் தொடர்பு சாதனங்கள் மற்றும் தொலைத் தொடர்பு வசதி ஏற்படுத்தப்படும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காணொலி வாயிலாக விசாரணை மேற்கொள்வதற்கான வசதிகளும் இடம்பெறும் என்று அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>><><><><><<

ஜம்மு கஷ்மீரையொட்டி எல்லைப் பகுதிகளில் தீவிரவாதிகள் மேற்கொண்ட ஊடுருவல் முயற்சியினை பாதுகாப்புப் படையினர் வெற்றிகரமாக முறியடித்தனர்.

ஸ்ரீநகரில் செய்தியாளர்களிடம் பேசிய எல்லைப் பாதுகாப்புப் படையின் தலைமை இயக்குநர் திரு அசோக் யாதவ், அப்பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்வதற்கு பாதுகாப்புப் படையினர் தயாராக இருப்பதாகவும் திரு அசோக் யாதவ் கூறினார்.

>><><><><><<

ஹங்கேரியின் டிரோன்கள் உக்ரைனில் ஊடுருவியதாக அந்நாட்டு அதிபர் திரு *Volodymyr Zelensky* கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனைத் தெரிவித்துள்ள அவர், உக்ரைனின் தொழில் பகுதிகளை குறிவைத்து இந்த டிரோன் தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறினார்.

இருப்பினும் இந்த குற்றச்சாட்டை ஹங்கேரி நிராகரித்துள்ளது.

>><><><><><<

வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், ஒடிசாவின் கோபால்பூர் அருகே இன்று அதிகாலை நான்கரை மணியளவில் கரையை கடந்தது.

இது, ஒடிசா மற்றும் சத்திஷ்கர் கடற்கரை பகுதியின் மேற்கே நகர்ந்து, அடுத்த 24 மணி நேரத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுவிழக்கக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>><><><><><<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

உலக பாரா வில்வித்தைப் போட்டியில் இந்தியாவின் Sheetal – Sarita இணை வெள்ளிப் பதக்கம் வென்றது.

தென்கொரியாவின் Gwangju-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்த இணை இப்பதக்கத்தை கைப்பற்றியது.

-------------------

உலகக்கோப்பை ஜூனியர் துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 10 மீட்டர் கலப்பு இரட்டையர் பிரிவில் Rashmika – Kapil இணை தங்கப்பதக்கத்தையும், Vanshika – Antony இணை வெள்ளிப்பதக்கத்தையும் வென்றது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 3 தங்கம், 4 வெள்ளி, 2 வெண்கலப்பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முதல் இடத்தில் நீடிக்கிறது.

---------------

உலக பாரா தடகள சாம்பியன் போட்டியின் மகளிர் 400 மீட்டர் ஓட்டப் பிரிவில், இந்தியாவின் Deepthi Jeevanji இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் தகுதிச் சுற்றில் முதலிடத்தை பிடித்ததன் மூலம் அவர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார்.

-------------

உலக Cadet செஸ் சாம்பியன் போட்டியின் 7வது சுற்று முடிவில் இந்தியாவின் Sarbartho Mani முதலிடத்தில் உள்ளார்.

கஜகஸ்தானின் Almaty-யில் நடைபெற்று வரும் இப்போட்டியின்

10 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் அவர், ஆறரை புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறார்.

மகளிர் 12 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் Pratitee Porboloi இரண்டாவது இடத்தில் உள்ளார்.

மகளிர் *8* வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் *Teesha* *Byadwal*-ம், *10* வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் *Sharvaanica*-வும் மூன்றாவது இடத்தில் உள்ளனர்.

>> <<